TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8069861

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் Tirunelveli | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year ஆண்டு 2020 | FIR No.: மு.த.அ. எண் 05/2020 | Date நாள் 18.08.2019

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 | Sections பிரிவுகள்: 7 (b)
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 17.08.2020 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 11.30 hrs | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.08.2020 | Time : நேரம் 08.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Palayamkottai Ward Office, Tirunelveli Corporation. 2 Km North
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S.KANDAN | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.SORIMUTHU
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.12.1949 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Retired Sub Inspector of Police. | (g) Address : முகவரி 6/16 Andal Street, Thimmarajapuram Palayamkottai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Shanmugam, Superintendent, Palayamkottai Ward Office, Tirunelveli Corporation.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 18.08.2020-ம் தேதி காலை 08.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.S.கந்தன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட பாளையங்கோட்டை வார்டு அலுவலக கண்காணிப்பாளர் திரு.சண்முகம் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 18.08.2020-ம் தேதி 09.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2020 u/s 7(b) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் S.கந்தன், வயது 70/2020 த/பெ சொரிமுத்து, 6/16 ஆண்டாள் தெரு, திம்மராஜபுரம், பாளையங்கோட்டை. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருநெல்வேலி. ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.12.2007-ம் தேதி ஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கும் எனது மனைவி பார்வதிக்கும் 05.12.1969ல் திருமணம் நடைபெற்றது. எனது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Kandan

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 18.08.2020

J. Anitha
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.08.2020 | 09.30.

Name: பெயர் ஜெ.அனிதா
Rank: நிலை ..................... No. எண் ..........
காவல் ஆய்வாளர்
ஊ.த.க.ப.
திருநெல்வேலி
18.08.2020.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

மனைவி பார்வதியை திம்மராஜபுரத்தை சேர்ந்த திரு.செல்லையாத்தேவர் அவரது மனைவி திருமதி.செல்லம்மாள் ஆகிய இருவரும் வளர்ப்பு மகளாக தத்து எடுத்து வளர்த்து வந்தனர். எனது மாமா திரு.செல்லையாத்தேவர் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரது மற்றும் அவரது மனைவி திருமதி.செல்லம்மாள் காலத்திற்கு பின் அனுபவித்துக்கொள்ள பாளையங்கோட்டை சார்பதிவக ஆவண எண் 11/1970ன்படி எனக்கும் மற்றும் எனது மனைவி பார்வதிக்கும் உயில் எழுதி கொடுத்துள்ளார். எனது மாமா திரு.செல்லையாத்தேவர் 27.10.1974-ம் தேதி இறந்துவிட்டார். எனது அத்தை திரு.செல்லம்மாள் 06.04.2001-ம் தேதி இறந்துவிட்டார். எனது மனைவி அவர்களது வளர்ப்பு மகள் என்ற அடிப்படையில் வாரிசு சான்று கேட்டு தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்தபோது நீதிமன்றத்தை நாடி சான்று பெற்றுக்கொள்ளுமாறு சொன்னார்கள். அதனடிப்படையில் திருமதி.செல்லம்மாள் அவர்கள் ஓய்வூதியம் பெற்று வந்த பாரத ஸ்டேட் வங்கி கிளையில் உள்ள சேமிப்பு கணக்கை பரிவர்த்தனை செய்ய எனது மனைவி பார்வதி திருநெல்வேலி மாவட்ட முதன்மை முனிசிப் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து Succession certificate என்ற உத்தரவு Succession O.P.No.4/2001 dt.23.08.2001-ன்படி பெற்றார். இதனடிப்படையில் திருமதி.செல்லம்மாள் பெயரில் திம்மராஜபுரம் உச்சிமாகரியம்மன் கோவில் தெரு, கதவு எண் 38 மற்றும் 38Aல் உள்ள இரண்டு வீடுகளை எனது மனைவி பெயரில் பெயர் மாற்றம் செய்ய வேண்டி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்தில் என் மனைவி பெயரில் விண்ணப்பித்தேன். அதனடிப்படையில் எனது மனைவி பார்வதி பெயரில் மேற்படி இரண்டு வீட்டையும் பெயர் மாற்றம் செய்து கொடுத்தார்கள். எனது அத்தை திருமதி.செல்லம்மாள் பெயரில் உள்ள கதவு எண் 136, திம்மராஜபுரம் தென்பகுதி உள்ள மற்றொரு வீட்டையும் எனது மனைவி பெயரில் பெயர் மாற்றம் செய்ய வேண்டி 29.01.2020ல் ரூ.50/- செலுத்தி எனது மனைவி பெயரில் விண்ணப்பித்தேன். பெயர் மாற்றம் தொடர்பாக பலமுறை பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்கு சென்று கண்காணிப்பாளர் திரு.சண்முகம் அவர்களை பார்த்தபோது அவர் ஏற்கனவே இரண்டு வீட்டுக்கு பெயர் மாற்றம் செய்யும்போது பணம் தராமல் ஏமாற்றி விட்டீர்கள் என்று சொன்னார். நானும் வேலை எல்லாம் முடியட்டும் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி வந்தேன். மேற்படி வீட்டுக்கு எனது மனைவி பெயரில் பெயர் மாற்றம் செய்து மாநகராட்சி ஆணையாளர் உத்தரவு போட்டுவிட்டார் என்று தெரியவந்ததால் நேற்று 17.08.2020ம் தேதி காலை 11.30 மணியளவில் பாளையங்கோட்டை வார்டு ஆபீஸ்

கண்காணிப்பாளர் திரு.சண்முகம் அவர்களை பார்த்து பெயர் மாற்றத்திற்குரிய உத்தரவு கேட்டேன். அவர் தனக்கு ரூ.5,000/- தந்தால்தான் உத்தரவு தர முடியும் என்றும், தன்னிடம் மேற்படி உத்தரவு ரெடியாக உள்ளது என்றும் சொன்னார். நான் கேட்ட பணம் ரூ.5,000/- தந்தால்தான் உத்தரவை தருவேன் என்று சொன்னார். நான் என்னிடம் அவ்வளவு பணம் தர இயலாது என்று சொன்னேன். அதற்கு அவர் எனக்கு ரூ.5,000/- தந்தால் தான் பெயர் மாற்றத்திற்கான உத்தரவு தரமுடியும் என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டார். நானும் வேறு வழியின்றி அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து நான் யோசித்து பார்த்தபொழுது மாநகராட்சி ஆணையாளர் போட்ட உத்தரவை எனக்கு கொடுக்க லஞ்சமாக ரூபாய் 5,000/- கேட்கிறார் என்று எனது மனம் கஷ்டப்பட்டது. அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே இன்று 18.08.2020ம் தேதி இது சம்மந்தமாக ஒரு புகார் மனு கொடுக்கிறேன். என்னிடம் எனது மனைவி பெயரில் சொத்து பெயர் மாற்றம் செய்த உத்தரவை கொடுக்க லஞ்சம் கேட்ட கண்காணிப்பாளர் திரு.சண்முகம் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

Sir, Received the complaint on 18.08.2020 at 08.00 hrs and conducted confidential enquiry. I registered a case in Tirunelveli V&AC Cr.No.05/2020 u/s 7(b) of Prevention of Corruption Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 18.08.2020 at 09.00 hrs. sd.J.ANITHA, Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

J. Anitha
18/08/2020.

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
Tirunelveli Detachment
TIRUNELVELI